# வறட்சியிலும் வளமை காட்டும் மறுதாம்புச் சோளம்!



**செந்தில்குமார் தனது வயலில்...** **மறுதாம்புச்சோள வயலில் மேயும் மாடுகள்...**



கோடைக் காலங்களில் கூடும் சந்தைகளில்தான் அதிகளவில் ஆடு, மாடுகள் விற்பனைக்கு வரும். அதற்குக் காரணம்.. வறட்சிக் காலங்களில் பசுந்தீவன உற்பத்தி தடைபடுவதுதான். கறவை மாடு வளர்ப்பவர்கள் பலருக்கும் சவாலான விஷயமாக இருப்பதே இந்த பசுந்தீவனம்தான். இத்தகையச் சூழலைச் சமாளித்து, கால்நடை வளர்ப்பில் வெற்றி நடை போட நினைக்கும் விவசாயிகளுக்குக் கைகொடுக்கிறது 'கோ.எஃப்.எஸ் – 29' எனும் தீவனச் சோளம்! ஒரு முறை விதைத்துவிட்டால்.. ஆண்டுக் கணக்காக அறுத்து, மாடுகளுக்குப் போட்டுக் கொண்டே இருக்கலாம் என்பதால், இதற்கு மறுதாம்புச் சோளம் (Multicut Cholam) என்றும் பெயர் உண்டு.

தற்போது கறவை மாடு வளர்க்கும் பொரும்பாலானோர், இந்தத் தீவனப் பயிரையும் சேர்த்தே சாகுபடி செய்கிறார்கள். அப்படி சாகுபடி செய்து வரும் விழுப்புரம் மாவட்டம், சின்னசேலம், தென்செட்டியேந்தல் கிராமத்தைச் சேர்ந்த செந்தில்குமார், தன் அனுபவத்தை இங்கே பகிர்கிறார்.

பொறியியலில் இருந்து உழவியலுக்கு!

மெக்கானிக்கல் இன்ஜினீயரிங் டிப்ளமோ முடித்துவிட்டு, தனியார் பாலிடெக்னிகல் வேலை பார்த்துக் கொண்டிருந்தேன். அந்த வருமானம் போததால், வேலையை விட்டுட்டு.. பூர்விகமாக இருந்த ஏழு ஏக்கர் நிலத்தில் விவசாயத்தை ஆரம்பித்தேன். கடலை, பருத்தி, மரவள்ளி என்று சாகுபடி செய்யததில் கிடைத்த வருமானத்தில் பாதியை உரக்கடைக்கும் கூலிக்கும்தான் கொடுக்க வேண்டியிருந்தது. வருமானம் குறைச்சலாக இருக்கவே, என்கிட்ட  இருந்த இரண்டு கறவை மாடுகளைப் பெருக்கி பால் பண்ணை வைக்கலாம் என்ற முடிவு செய்தேன்.

வறட்சி கற்றுக்கொடுத்த பாடம்!

அதற்காக 25 சென்ட்டில் கோ – 4 தீவனப்புல் கரணையை வாங்கி நடவு செய்தேன். வெயில் காலம் ஆரம்பித்ததும் கிணற்றில் தண்ணிர் வறண்டு, புல் முழுக்க பட்டுப் போய்விட்டது.  அது நடந்து ஆறு வருடமாகிறது. அந்த சமயத்தில்தான் சின்ன சேலத்தில் இருக்கும் அரசு ஆட்டுப்பண்ணையில் ‘கோ.எஃப்.எஸ் – 29’ தீவனச்சோளத்தைப் பற்றித் தெரிந்துக் கொண்டு கால் கிலோ விதையை வாங்கிட்டு வந்து, 10 சென்ட்டில் விதைத்தேன். நன்றாக வளர்ந்து வந்தது. அந்த வருடமும் வறட்சிதான். ஆனால் பயிருக்கு ஒண்ணும் ஆகவில்லை. அதனால் அரை ஏக்கரில் அதையே விதைத்து விட்டுட்டேன். வளர்ந்த தீவனச் சோளத்தில் இருந்தெ விதையும் கிடைத்ததால் ஆறு மாதத்திற்கு முன், அரை ஏக்கர் முருங்கைக்கு இடையில் ஊடுபயிராகவும் தீவனச் சோளத்தை விதைத்திருக்கிறேன் என்ற செந்தில்குமார், அரை ஏக்கரில் அதை பயிரிடும் முறை பற்றி பாடமாகவே சொல்ல ஆரம்பித்தார்.

ஊடுபயிருக்கும் ஏற்றது!

கோ.எஃப்.எஸ் – 29 ரக தீவனச் சோளத்திற்க்கு அனைத்துப் பட்டங்கள்  மற்றும் அனைத்து மண் வகைகளும் ஏற்றவை. வசதிக்கு ஏற்றபடி தனிப் பயிராகவோ.. ஊடுபயிராகவோ சாகுபடி செய்து கொள்ளலாம். தனிப்பயிராக சாகுபடி செய்யும் முறை, அரை ஏக்கர் நிலத்தில் ஒன்றரை டன் தொழுவுரத்தைக் கொட்டிக் களைத்து, இரண்டு சால் உழவு ஓட்டி, மண்ணைப் புழுதியாக்க

வேண்டும். தண்ணீர்கட்ட ஏதுவாக வாய்க்கால் வரப்புகள் அமைத்துக் கொண்டு, ஓரடி இடைவெளியில் ஐந்து ஐந்து விதைகளாக ஊன்ற வேண்டும். அரை ஏக்கருக்கு இரண்டரை கிலோ விதை தேவைப்படும்.

ஆண்டுக்கு ஆறு அறுப்பு!

தொடர்ந்து நிலம் காயாத அளவிற்க்கு தண்ணீர் கட்டி வர வேண்டும். சொட்டுநீர்ப் பாசனமாக இருந்தால்.. 5 அடி இடைவெளியில் தண்ணீர் சொட்டுவது போல் அமைத்து, தினமும் ஒரு மணி நேரம் பாசனம் செய்தால், போதுமானது.

விதைத்த 7-ம் நாளில் முளைப்பு வரும். 20 மற்றும் 40-ம் நாட்களில் களைகளை அகற்ற வேண்டும். அதற்கு மேல் செடிகள் படர்ந்து விடுவதால் களைகள் முளைக்காது. அவ்வப்போது சாணம், மாட்டுச் சிறுநீர் ஆகியவற்றை பாசன நீருடன் கலந்து விட்டாலே நன்கு வளர்ந்து விடும் (ஊடுபயிராக சாகுபடி செய்யும் போது, முதன்மைப் பயிருக்கு இடும் உரங்களே போதுமானதாக இருக்கும்).

விதைத்த 60-ம் நாள் முதல் அறுவடை செய்யலாம். தொடர்ந்து ஒன்றரை மாதத்திற்க்கு ஒரு முறை என ஆண்டுக்கு ஆறு முறை அறுவடை செய்யலாம். ஆறு முறையும் சேர்த்து, அரை ஏக்கரில் வருடத்திற்கு 60 டன் பசுந்தீவனத்தை அறுவடை செய்யலாம். அறுவடை செய்ய ஆட்கள் பற்றாக்குறை என்றால், வயலிலேயே மாடுகளை மேய விடலாம். மாடுகளின் கால்களால் மிதிப்பட்டாலும் தீவனப்பயிர்களுக்கு பாதிப்பு ஏற்படாது.

விதை உற்பத்தியும் செய்யலாம்!

விதை உற்பத்தி செய்ய வேண்டுமென்றால்.. 60 –ம் நாளில் அறுவடை செய்யாமல் விட்டுவிட வேண்டும். 70 –ம் நாளி பூவெடுக்க ஆரம்பித்து, 110 –ம் நாளுக்கு மேல் கதிர்கள் முற்றி விடும். அவற்றை அறுவடை செய்து காயவைத்து, குச்சியில் தட்டி விதைகளை தனியாக பிரித்து எடுத்துக் கொள்ளலாம். ஆண்டுக்கு மூன்று முறை இப்படி விதை எடுக்கலாம். ஒவ்வொரு முறைக்கும் அரை ஏக்கரில் இருந்து 75 கிலோ முதல் 100 கிலோ வரை விதை கிடைக்கும்.

ஒரு கிலோ விதை 250 ரூபாய்!

என்கிட்ட இப்பொழுது 14 மாடுகள் இருக்கு. ஆரம்பத்தில் மாட்டுக்கு 20 கிலோ என்ற கணக்கில் அறுத்துத்தான் தீவனம் போட்டுக்கிட்டிருந்தேன். பிறகு, வயலிலேயே கட்டி மேய்ய ஆரம்பித்துவிட்டேன். மேயும்போதே சாணமும், மூத்திரமும் வயலில் விழுந்துவிடுவதால் தனியாக உரம் கொடுப்பதில்லை. மாடு மிதித்தால்.. பயிர் துளிர்க்காது என்று சொல்வாங்க ஆனால், இந்த ரக சோளத்தட்டைத் துளிர்த்து வந்துவிடுகிறது. வருடத்தில் இரண்டு முறை மட்டும் விதை எடுப்பேன்.

அரை ஏக்கரில் இருந்து, வருடத்திற்க்குச் சராசரியாக 150 கிலோ அளவிற்க்கு விதை கிடைக்கும். கிலோ 250 ரூபாய் வரைக்கும் விலை போகிறது. அது மூலமாகவும் தனியாக வருமானம் பார்க்கலாம். எல்லாத்தையும்விட.. வறட்சிக் காலத்திலேயும் பசுந்தீவனத்திற்க்குக் கவலையே இல்லாமல் இருக்க முடியும்.

**தொடர்புக்கு**

செந்தில்குமார்,

அலைபேசி : 99658 28641

**ஆதாரம்** : www.vikatan.com பசுமை விகடன் வெளியிடான தேதி, 10.9.11